**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 108 of 2019

Deposition of P.W. 1

Name of the Witness: திருமதி.ராஜேஸ்வரி

Date : 08.01.2026

***16ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை***

எனக்கு 66 வயதாகிறது. நான் 1977ல் பி.யூ.சி. படித்து முடித்தேன். என் அப்பாவிற்கு நான் 2வது குழந்தை. 1ம் பிரதிவாதி என் அண்ணண் ஆவார். 2, 3, 4 பிரதிவாதிகள் எனது தம்பிகள். 7, 8, 9 பிரதிவாதிகள் எனது உடன் பிறந்த சகோதரிகள் ஆவார்கள். என் அப்பா 2010ம் வருடம் இறந்தார். நான் பி.யூ.சி. படித்து முடித்து 2 வருடம் கழித்து எனக்கு திருமணமானது. என் திருமணம் என் பெற்றோர்களால் பார்த்து ஏற்பாடு செய்யப்பட்டது என்றால் சரிதான். திருமணம் ஆனதிலிருந்து நான் என் கணவர் வீட்டில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியும், அர்த்தம் புரியாது. என் பிரமாண வாக்குமூலம் ஆங்கிலத்தில் உள்ளது, அதற்கு அர்த்தம் தெரியாது. நான் அனுப்பிய சட்ட அறிவிப்பிலும், என்னுடைய வழக்குரையிலும் ஆங்கிலத்தில் உள்ளதால் அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. எனக்கு என்னுடைய சட்ட அறிவிப்பு, தாவா, பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்று கொள்ள முடியாது என்றால் சரியல்ல. வழக்குரையில் உள்ள சங்கதிகளை நான் தான் சொன்னேன்.

2) நான் என்னுடைய திருமணத்திற்கு பிறகு தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. நான் பொய்யாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பாவின் வாரிசு சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாவா தாக்கல் செய்யும் போது நான் தாக்கல் செய்த வில்லங்க சான்றிதழை குறியீடு செய்யவில்லை என்றால் சரிதான்.

3) நான் 1977லிலிருந்து 2019 வரை நானும் எனது சகோதர, சகோதரிகளும் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றாலும், 2009லே என் அப்பா விருப்பப்பட்டு தானாக முன்வந்து குடும்ப சொத்துக்களை பாக பிரிவினை செய்து கொடுத்துள்ளார் என்றாலும், அதன் அடிப்படையில் வருவாய் துறை ஆவணங்கள் மாற்றம் செய்யப்பட்டு தனித் தனியாக சுவாதீனத்தில் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், அதை மறைத்து நான் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு காலவரை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் அப்பாவின் இறப்பு சடங்குகளில் நான் கலந்து கொண்டேன். 2010ம் ஆண்டு என் அப்பா இறந்து பின்னிட்டு எனக்கும், என் சகோதர, சகோதரிகளுக்கும் இடையே பேச்சு வார்த்தை உள்ளது. தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இருப்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யாததால் தாவா சொத்தில் கூட்டு

சுவாதீனத்தில் இருப்பதாக தாவாவில் சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல.

*4) 1979*ம் ஆண்டில் என் திருமணத்தின் போது என் அப்பாஎனக்கு சீர்வரிசைகள் செய்து என் பெற்றோர்களால் திருமணம் செய்யபப்பட்டது என்றும், எனக்கு குடும்ப சொத்திற்கு ஈடாக அப்போதே உரிய அசையும் சொத்துக்கள் கொடுக்கப்பட்டது என்றும், பின்னிட்டு என் அப்பா 2009ம் ஆண்டில் குடும்ப சொத்துக்களை பொறுத்து இதர வாரிசுதாரர்கள் பெயரில் பாகப்பிரிவினை செய்து கொடுத்துள்ளதால் பொது குடும்ப சொத்துக்களில் சட்டபடி பாகம் கோர எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.